**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**
**A051 மொழிவரலாறு – 1**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. எழுத்தின் அடிப்படையாக அமைவது எது?
2. தமிழகத்தைச் சுற்றியிருந்த பன்னிரு நாடுகளில் வழங்கப்பட்ட சொல்லிற்கு என்ன பெயர்?
3. தமிழில் தோன்றிய முதல் நிகண்டு எது?
4. தமிழுக்கும் மலையாளத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு என்று கூறியவர் யார்?
5. அசோகர் கல்வெட்டுகளில் இல்லாத தமிழ் உயிர் எழுத்துகள் எவை?
6. ஐ,ஔ, இரண்டையும் வடமொழி இலக்கணத்தார் எவ்வாறு அழைப்பர்?
7. பல்லும் இதழும் சேர்வதால் பிறக்கும் எழுத்து எது?
8. உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாக வழங்கும் பெயர் என்ன?
9. தென்மாவட்டங்களில் நிலைபெற்றுவிட்ட ஒருங்கிணைவு மாற்றம் எது?
10. வீரசோழியம் சுட்டிய ஆண்பாலிற்குரிய புதிய விகுதிகள் யாவை?
11. சோழர் காலத்தில் மிகுதியாகப் பயின்று வந்த எதிர்மறை வினையெச்ச விகுதிகள் யாவை?
12. கல்வெட்டுகளில் வடமொழி எழுத்துகள் எந்த வடிவத்தில் எழுதப்பட்டன?
13. ஓவிய எழுத்து முறை சப்பான் மொழியிலும் சீன மொழியிலும் காணப்படுவதாகக் குறிப்பிட்டவர் யார்?

14. 'இக்காலத் தமிழ் மரபு' என்ற நூலின் ஆசிரியர் யார்?
15. கேட்டல் பண்பை மட்டும் அடிப்படையாகக் கொண்ட மின்னணு ஊடகம் எது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. தொடரின் வகைகளைக் குறிப்பிடுக.
2. கால்டுவெல் குறித்து எழுதுக.
3. உருபனியல் என்றால் என்ன?
4. 'கள்' விகுதியின் செயல்பாடு குறித்து விவரி.
5. அப்பர் தேவாரத்தில் ஞகரமாதல் எங்ஙனம் திகழ்ந்துள்ளது?
6. 'கில்' என்னும் புதிய இடைச்சொல்லின் வருகையைப் புலப்படுத்துக.
7. ஓரினமாதல் என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.
8. பாரதியின் நடை பற்றி விவரிக்க.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) மொழியின் வகைகள் குறித்துக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) திராவிட மொழிகளில் மூவிடப் பெயர்களின் பயன்பாடு குறித்து ஆராய்க.

2. (அ) தொல்காப்பியத்தில் காணலாகும் ஒலிகளின் பாகுபாட்டினைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பல்லவர் காலத்தில் பெயர்ச்சொற்கள் அடைந்த மாற்றங்களை விரித்துரைக்க.

3. (அ) தமிழின் வரிவடிவ வளர்ச்சிப் போக்குகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பிற மொழிகளில் தமிழின் செல்வாக்குக் குறித்துக் கட்டுரை வரைக.

***